**டிசம்பர் – 10**

# TNPSC துளிகள்

- 14வது ஆசிய-ஓசியானியா வானிலை செயற்கைக்கோள் பயனர்கள் மாநாடு (AOMSUC-14) ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
- மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியம் (CBIC) ஆனது, உலக வங்கியுடன் இணைந்து புது டெல்லியில் இரண்டு நாட்கள் அளவிலான உலகளாவிய அங்கீகரிக்கப் பட்ட இந்தியப் பொருளாதார நிறுவனங்கள் (AEO) திட்டத்தினை ஏற்பாடு செய்துள்ளது.
- ஜம்மு மற்றும் காஷ்மீரில் சுற்றுச்சூழல் சார் சுற்றுலா மற்றும் மிகப்பெரும் பாரம்பரிய போக்குவரத்தை மேம்படுத்துவதற்காக வேண்டி, ஸ்ரீநகரில் உள்ள தால் ஏரியில் உபெர் நிறுவனம் தனது ஷிகாரா (சிறிய படகுகள்) சேவைகளைத் தொடங்கியுள்ளது.
- இந்தியா மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகிய நாடுகள், எதிர்கால நுட்பம் சார்ந்த போர்க் கப்பல்களில் பயன்படுத்தப்படும் மின்சார உந்துவிசை அமைப்புகளை இணைந்து வடிவமைத்தல் மற்றும் இணைந்து உற்பத்தி செய்வதற்காக என்று ஒரு கட்டமைப்பு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளன.
- நேபாளம் மற்றும் சீனா ஆகிய நாடுகள் பெய்ஜிங் நகரில் மண்டலம் மற்றும் சாலை முன்னெடுப்பிற்கான (BRI) அமலாக்கக் கட்டமைப்பில் கையெழுத்திட்டுள்ளன.
- GRIHA சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட 16வது GRIHA உச்சி மாநாடு ஆனது "Accelerating Climate Action in the Built Environment" என்ற கருத்துருவில் புது டெல்லியில் நடைபெற்றது.
- பீகார் மாநிலத்தில் உள்ள கலுகாட் எனுமிடத்தில் உள்ள இந்திய உள்நாட்டு நீர்வழிகள் ஆணையத்தின் பல்பயன்பாட்டு இடைநிலை முனையம் (IMT) ஆனது GRIHA சபையின் ஐந்து நட்சத்திர SVAGRIHA மதிப்பீட்டைப் பெற்றுள்ளது.
- டெல்லி முதல்வர், ரோகினி எனுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ள தேசிய மாணாக்கர் படை (NCC) இல்லத்தில் நிலத்தடியில் உள்ள துப்பாக்கி சுடுதல் பயிற்சித் தளத்தைத் திறந்து வைத்துள்ளார்.
- சுமார் 4000 பேருக்கு மேலான இறுதிச் சடங்குகளைச் செய்த பூஜா ஷர்மா, 2024 ஆம் ஆண்டிற்கான BBC இதழின் உலகின் 100 ஊக்கமளிக்கும் மற்றும் செல்வாக்கு மிக்க பெண்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளார்.
  - இந்தியாவில் இருந்து அருணா ராய் மற்றும் வினேஷ் போகட் ஆகியோரும் இந்தப் பட்டியலில் இடம் பிடித்துள்ளனர்.

# தமிழ்நாடு செய்திகள்

## ஆபத்சஹாயேஸ்வரர் கோவில்

- தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள துக்காட்சி எனுமிடத்தில் உள்ள சுமார் 1,300 ஆண்டுகள் மிகவும் பழமையான ஆபத்சகாயேஸ்வரர் கோயில், யுனெஸ்கோ அமைப்பின் 2023 ஆம் ஆண்டு சிறப்பு விருதினைப் பெறுவதற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- விக்ரம சோழன் மற்றும் குலோத்துங்க சோழன் ஆகியோரால் கட்டப்பட்டதாக நம்பப் படும் இந்த கோவிலில் முன்பு ஐந்து பிரகாரங்கள் இருந்ததாக கூறப்படுகிறது.
- இந்த ஊர் ஆனது விக்ரம சோழீஸ்வரம் என்றும் குலோத்துங்க சோழ நல்லூர் என்றும் அழைக்கப் பட்டது.
- சரபேஸ்வரருக்கு முதன்முதலில் சிலையை நிறுவியவர் குலோத்துங்க மன்னராவார்,

அதனால்தான் இந்த தெய்வம் ஆதி சரபேஸ்வரர் என்று அழைக்கப்படுகிறது.

- சுமார் 1000 ஆண்டுகளுக்கும் மேலான கோவில்களைப் புனரமைக்கவும் புதுப்பிக்கவும் தமிழக அரசு ஆண்டிற்கு 100 கோடி ரூபாய் மானியம் வழங்கியுள்ளது.




## யானைத் தாக்குதலைக் குறைப்பதற்கான தமிழ்நாடு மாதிரி




- கர்நாடக அரசானது, மாநிலத்தில் காட்டு யானைகளின் மிகப்பெரும் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்காக தமிழ்நாடு மாதிரியை ஆய்வு செய்யுமாறு அதன் வனத்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.
- தற்போது, சுமார் ஒரு கிலோமீட்டருக்கு சுமார் 1.5 கோடி ரூபாய் என்ற ஒரு செலவின மதிப்பீட்டினைக் கொண்ட இரயில்வே வழித்தட தடுப்புகளை நிறுவுவது யானைகளின் அச்சுறுத்தலைத் தணிப்பதற்கான நிரூபிக்கப்பட்ட தீர்வாக உள்ளது.
- இருப்பினும், இந்த நோக்கத்திற்காக வேண்டி போதுமான இரயில் பாதை தடங்களை வாங்குவதில் வரம்பு உள்ளது.
- தமிழகத்தில் ஒரு கிலோ மீட்டருக்கு சுமார் 45 லட்சம் ரூபாய் செலவில் இரும்புக் கயிறு

வேலிகள் தடுப்புச்சுவராக அமைக்கப்பட்டுள்ளன.

❖ இரயில்வே தடுப்புகளுடன் ஒப்பிடும்போது, உள்நாட்டில் கிடைக்கும் பொருட்களைப் பயன்படுத்துதல் ஆனது சுற்றுச்சூழல் சீர்குலைவுகளைக் குறைக்கிறது.

# தேசியச் செய்திகள்

## பெண் தொழிலாளர் வளப் பங்கேற்பு 2017-2023

❖ தேசிய அளவில் 2017-2018 மற்றும் 2022-2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் கிராமப் புறப் பெண் தொழிலாளர் வளப் பங்கேற்பு விகிதம் ஆனது 24.6 சதவீதத்திலிருந்து 41.5% ஆக அதிகரித்துள்ளது.


❖ இது 5 ஆண்டுகளில் பதிவான 69% என்ற ஒட்டு மொத்த வளர்ச்சியைக் குறிக்கிறது.

❖ ஜார்க்கண்ட், பீகார் மற்றும் நாகாலாந்து போன்ற மாநிலங்கள் மிகவும் அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டுள்ளன.

❖ தேசிய அளவில் 2017-2018 மற்றும் 2022-2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையே நகர்ப்புற பெண் தொழிலாளர் வளப் பங்கேற்பு விகிதம் ஆனது 20.4 சதவீதத்திலிருந்து 25.4% ஆக அதிகரித்துள்ளது.

❖ குஜராத் மாநிலமானது 63% என்ற குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ள அதே நேரத்தில் தமிழ்நாடு நகர்ப்புறப் பெண்களின் LFPR மீதான விகிதத்தில் ஓரளவு உயர்வே பதிவாகியுள்ளது.

❖ குறிப்பாக ஜார்க்கண்ட், அருணாச்சலப் பிரதேசம், நாகாலாந்து மற்றும் இராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் திருமணமான பெண்களிடையே, பெண்களின் LFPR மீதான விகிதத்தில் குறிப்பிடத்தக்க உயர்வு பதிவாகியுள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.




## எண்ணெய் வயல் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) திருத்த மசோதா, 2024


❖ மாநிலங்களவையானது, எண்ணெய் வயல் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) திருத்த மசோதாவை நிறைவேற்றியுள்ளது.

❖ இது பெட்ரோலியச் செயல்பாடுகளை சுரங்க நடவடிக்கைகளில் இருந்து பிரிப்பதை நோக்கமாகக் கொண்டது.

❖ இது "கனிம எண்ணெய்கள்" என்ற சொல்லின் நோக்க எல்லையினை விரிவுபடுத்தச் செய்வதோடு பிற விதிகளுள் "பெட்ரோலியக் குத்தகை" என்ற ஒரு கருத்தை அறிமுகப்

படுத்துகிறது.


- இந்தியா சுமார் 13 பில்லியன் டன் எண்ணெய்க்கு சமமான இன்னும் கண்டறியப்படாத ஆற்றலைக் கொண்டிருப்பதாக நம்பப்படுகிறது.
- 1948 ஆம் ஆண்டு எண்ணெய் வயல்களின் (ஒழுங்குமுறை மற்றும் அதன் மேம்பாடு) சட்டத்தில், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஆகிய இரண்டு மட்டுமே கனிம எண்ணெய்கள் என வரையறுக்கப்பட்டுள்ளன.
- இந்த மசோதாவானது, நிலக்கரிப் படிம மீத்தேன், கச்சா எண்ணெய், களிப்பாறை வளிமம் (ஷேல் கேஸ்), நிலக்கீல் எண்ணெய், குறைவான ஊடுருவல் தன்மை கொண்ட வாயு, குறைவான ஊடுருவல் தன்மை கொண்ட எண்ணெய் மற்றும் வாயு ஹைட்ரேட் ஆகியவற்றை உள்ளடக்கிய வகையில் இந்த ஒரு வரையறையை விரிவுபடுத்துகிறது, ஆனால் பெட்ரோலியத்தின் செயல்பாட்டில் உருவாகும் நிலக்கரி, லிக்னைட் மற்றும் ஹீலியம் இதில் உள்ளடக்கப்படவில்லை.
- பின்னர், இந்த மசோதாவானது முன்னர் பயன்படுத்தப்பட்ட சுரங்கக் குத்தகை என்ற சொல்லுக்குப் பதிலாக பெட்ரோலியக் குத்தகை என்ற ஒரு சொல்லினை இதில் மாற்றி அமைப்பதோடு இது நிறுவனங்கள் வளங்கள் குறித்து ஆய்வு செய்வதற்கும், அதன் வாய்ப்புகளைத் தேடச் செய்தல் (எண்ணெய் மற்றும் எரிவாயு வயல்களைத் தேடுதல்), உற்பத்திச் செய்தல், வணிகமாக்குதல் மற்றும் கனிம எண்ணெய்களை அகற்றுதல் ஆகியவற்றினை அனுமதிக்கிறது.




## செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான படுக்கை வசதி ஆய்வு

- இந்திய இரயில்வே நிர்வாகமானது, படுக்கைத் துணிகளை ஆய்வு செய்து தரநிலைப் படுத்துவதற்கு செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான அமைப்பை செயல்படுத்தி உள்ளது.
- இந்தச் செயற்கை நுண்ணறிவில் இயங்கும் ஒரு நூலிழை ஆய்வு மற்றும் தரவரிசைப் படுத்தும் உதவி அமைப்பானது (LISA) புனே இரயில்வே பிரிவால் உருவாக்கப்பட்டது.

- இது இரயில்களில் பயன்படுத்தப்படும் படுக்கை விரிப்புகளை 100% அளவு தர ஆய்வு செய்வதை உறுதி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.




## சர்வதேசச் செய்திகள்

### அரிய கனிமங்களின் ஏற்றுமதிக்குத் தடை




- அமெரிக்க நாட்டிற்கு கேலியம், ஜெர்மானியம் மற்றும் ஆன்டிமோனி ஆகிய மூன்று முக்கிய அரிய கனிமங்களின் ஏற்றுமதியை சீனா தடை செய்துள்ளது.
- அவை பெரும்பாலும் கணினிகள், பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் புதுப்பிக்கத்


தக்க ஆற்றல் தொழில்நுட்பத்தில் பயன்படுத்தப் படுகின்றன.

- உலகின் 60% ஜெர்மானியத்தையும் 80% கேலியத்தையும் சீனா உற்பத்தி செய்கிறது.
- சமீபத்தில் அமெரிக்காவானது சில வகையான சில்லுகள் மற்றும் இயந்திரங்களின் வர்த்தகத்தினைத் தடை செய்ததோடு மேலும், 100க்கும் மேற்பட்ட சீன நிறுவனங்களை தடை செய்யப்பட்ட வர்த்தகப் பட்டியலில் சேர்த்தது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## மிகவும் ஆற்றல் வாய்ந்த காஸ்மிக் கதிர்கள்

- நமீபியா நாட்டில் உள்ள உயர் ஆற்றல் முப்பரிமாண அமைப்பு (HESS) ஆய்வகத்தின் அறிவியலாளர்கள், இது வரையில் கண்டுபிடிக்கப்பட்டதில் மிகவும் ஆற்றல் வாய்ந்த காஸ்மிக் (அண்டக்) கதிர்களைக் கண்டறிந்துள்ளனர்.
- இவை பூமிக்கு மிக அருகில் உள்ள மர்மமான மூலங்களால் உற்பத்தி செய்யப் படுகின்றன.
- இந்தக் கதிர்கள் 40 டெரா எலக்ட்ரான் வோல்ட் (TeV) வரையிலான சில ஆற்றல்களில் அல்லது புலப்படும் ஒளியின் 40,000 மடங்கு ஆற்றலைக் கொண்டுள்ளன.
- காஸ்மிக் கதிர்கள் 1912 ஆம் ஆண்டில் ஆஸ்திரியாவின் இயற்பியலாளர் விக்டர் ஹெஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.
- இந்தக் கதிர்கள் ஆனது சூரியன், மீவொளிர் வீண்முகில்கள், வேகமாகச் சுழலும் துடிப் பண்டங்கள் மற்றும் பிற அறியப்படாத மூலங்களால் உற்பத்தி செய்யப்படும் உயர் ஆற்றல் துகள்கள் ஆகும்.




## உலகின் முதல் சுயமாக இயங்கும் செயற்கைக்கோள்

- உலகின் முதல் 'சுய இயக்க' செயற்கைக் கோள்களை சீனா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.

- இந்த செயற்கைக்கோள்கள் தரைக் கட்டுப்பாட்டு அமைப்புகளின் குறுக்கீடு எதுவும் இல்லாமல் தங்கள் இயக்கப் பாதைகளைத் தன்னிச்சையாகப் பேணுகின்ற அல்லது மாற்றும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- அது செயல்பாட்டிற்கு வந்தவுடன், இந்தச் செயற்கைக்கோள்கள் உயர் தெளிவுத்திறன் கொண்ட, நாள் முழுவதும் எடுக்கப்படும், அனைத்து வானிலையிலும் எடுக்கப்படும் ரேடார் படங்களை வழங்கும்.
- நிலநடுக்கம் மற்றும் வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்களைக் கண்காணித்தல், காடுகளை அழிப்பதைக் கண்காணித்தல், இராணுவக் கண்காணிப்பு ஆகியவற்றில் இது உதவும்.



## வெப்பத் தாக்குப் புரதம் 70 (HSP70)




- மலேரியா மற்றும் கோவிட்-19 நோய்க்கான சிகிச்சையை மாற்றியமைக்கக் கூடிய புதியதொரு பெரும் கண்டுபிடிப்பினை ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் (JNU) அறிவியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- மலேரியா மற்றும் கோவிட்-19 போன்ற நோய்கள் பரவுவதில் Hsp70 என்ற மனித புரதம் ஒரு முக்கிய காரணியாக இருப்பதை அவர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.
- Hsp70 (வெப்பத் தாக்குப் புரதம் 70) என்பது ஒரு வகை மூலக்கூறு சாப்பரோன் ஆகும்.
- இது மற்ற புரதங்களை அவற்றின் மிகச் சரியான வடிவங்களில் மடிக்க உதவுவதிலும்

தவறாக மடிவதைத் தடுப்பதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்ற ஒரு புரதமாகும்.

- Hsp70 புரதத்தினை ஒரு இலக்காகக் குறிவைப்பதன் மூலம், நோய்க்கிருமிகளின் நகல் எடுக்கும் திறனை மற்றும் நோயெதிர்ப்பு மண்டலத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் வைரசின் திறனைச் சீர்குலைக்கலாம்.

# மாநிலச் செய்திகள்

## டாட்டோ-I நீர் மின் நிலையம்





- அருணாச்சலப் பிரதேசத்தில் அமைக்கப்பட உள்ள டாட்டோ-I புனல் மின்னாற்றல் உற்பத்தி நிலையத்திற்காக (HEP) சுமார் 1750 கோடி ரூபாய் முதலீடு செய்ய மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த நிலையம் ஆனது ஷி யோமி மாவட்டத்தில் அமைக்கப்பட உள்ளதோடு மேலும், இதன் பணிகள் 50 மாதங்களுக்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- 186 MW (3 x 62 MW) நிறுவப்பட்டத் திறனுடன், டாட்டோ-I HEP நிலையம் ஆண்டுதோறும் 802 மில்லியன் அலகு (MU) மின்சாரத்தை உற்பத்தி செய்யும்.

# முக்கிய தினங்கள்

## மகா பரிநிர்வாண் திவாஸ் - டிசம்பர் 06

- மகா பரிநிர்வாண் திவாஸ் என்பது டாக்டர் பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கர் அவர்களின் நினைவு நாள் ஆகும்.
- அவர் 1956 ஆம் ஆண்டு டிசம்பர் 06 ஆம் தேதியன்று காலமானார்.
- இந்த ஆண்டு 69வது மகா பரிநிர்வாண் திவாஸ் அனுசரிக்கப்பட்டது.

- "மகா பரிநிர்வாண்" என்ற ஒரு சொல் பௌத்த/புத்த மதத் தத்துவத்திலிருந்து பெறப் படுவதோடு இது மரணத்திற்குப் பிறகு அடையப்படும் நிர்வாண (மோட்ச) நிலையைக் குறிக்கிறது.
- 1956 ஆம் ஆண்டில், டாக்டர் அம்பேத்கர் தமதுஆயிரக்கணக்கான சீடர்களுடன் புத்த மதத்தைத் தழுவினார்.




## அகில இந்தியக் குடிமை தற்காப்பு மற்றும் ஊர்க்காவல் படை தினம் - டிசம்பர் 06




- 1946 ஆம் ஆண்டு டிசம்பர் 06 ஆம் தேதியன்று பழைய பம்பாய் மாகாணத்தில் ஊர்க் காவல் படை உருவாக்கப்பட்டது.
- இது குடிமைசார் கலவரம் மற்றும் வகுப்புவாத கலவரங்களைக் கட்டுப்படுத்தச் செய்வதற்காக காவல்துறைக்கு உதவும் ஒரு தன்னார்வப் படையாகும்.
- 1962 ஆம் ஆண்டு சீன ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து, மத்திய அரசானது மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை ஏற்கனவே உள்ள தன்னார்வ அமைப்புகளை ஒரே சீரான தன்னார்வப் படையாக இணைக்க அறிவுறுத்தியது.

- ஊர்க்காவல் படையானது, மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் ஊர்க் காவல் படை சட்டம் மற்றும் விதிகளின் கீழ் உருவாக்கப்படுகின்றன.
- நாட்டில் உள்ள மொத்த ஊர்க்காவல் படையினரின் எண்ணிக்கை 5,73,793 ஆக உள்ளது, அதன் அதிகரிக்கப்பட்ட எண்ணிக்கை 4,86,401 ஆக உள்ளது.
- இந்த அமைப்பு ஆனது கேரளாவைத் தவிர அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களிலும் உள்ளது.

# இதரச் செய்திகள்

## 2024 ஆம் ஆண்டு விமானச் சேவை நிறுவனத் தரவரிசை

- இந்தியாவின் மிகப்பெரியதொரு விமானச் சேவை நிறுவனமான இண்டிகோ, 2024 ஆம் ஆண்டில் உலகின் மோசமான விமானச் சேவை நிறுவனங்களில் (103) ஒன்றாக இடம் பிடித்துள்ளது.
- 109 விமான நிறுவனங்களில் பிரஸ்சல்ஸ் ஏர்லைன்ஸ் (விமான சேவை) நிறுவனம் இந்தப் பட்டியலின் முதலிடத்திலும், கத்தார் ஏர்வேஸ் மற்றும் யுனைடெட் ஏர்லைன்ஸ் (8.04) அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.
- இதர மற்ற 109 விமான நிறுவனங்களில் இந்தியாவில் இருந்து இடம் பெற்ற ஒரேயொரு நிறுவனமான ஏர் இந்தியா இதில் 61வது இடத்தைப் பெற்றுள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★